# இயற்கையில் உறைந்திடும்

இயற்கையில் உறைந்திடும்
இணையற்ற இறைவா - என்
இதயத்தில் எழுந்திட வா
என்றும் இன்று என்னோடு
நின்று என்னை அன்போடு
காத்திடு என் தலைவா - 2

**1**
உந்தன் அன்பு உறவின்றி எனக்கு இங்கு
சொந்தம் சுற்றம் சூழ்ந்திட பயனென்னவோ
மெழுகாகினேன் ஆ.. ..ஆ... ..
திரியாக வா ஆ.. ..ஆ...
மலராகினேன் ஆ.. ..ஆ... மணமாக வா
(இயற்கையில்)

**2**
உருவில்லா இறைவன் உதவியின்றி
உலகத்தில் எதுவும் நடந்திடுமோ
குயிலாகினேன் ஆ.. ..ஆ... ..
குரலாக வா ஆ.. ..ஆ... ..
மயிலாகினேன் ஆ.. ..ஆ... ..நடமாட வா
(இயற்கையில்)